திருநாள், திருவள்ளுவர் நாள், உழவர் திருநாள், குடியரசு நாள், பக்ரீத் பண்டிகை, மொகரம், தெலுங்கு புத்தாண்டு நாள், தமிழ் புத்தாண்டு நாள், பெரிய வெள்ளிக் கிழமை, மே தினம், சுதந்தர தின நாள், வினாயகர் சதுர்த்தி, காந்தி ஜெயந்தி, ஆயுத பூஜை, தீபாவளி, ரம்சான், கிறிஸ்து பிறந்த நாள் போன்ற காரணங்களுக்காக விடப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று, இந்த தினங்களில் தலைவர்களுடைய பெயர்களில் யாருடைய பெயரையாவது ஏற்று அந்த நாட்களாக அவர்களுடைய நினைவில் சமதர்ம நாள் என்றோ, ஜனநாயக நாள் என்றோ, மக்கள் நலம்பெறும் நாள் என்றோ, அல்லது நாம் இப்போது ஏற்படுத்தியிருப்பதைப் போல காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராம மக்கள் நலம்பெறுகிற வாரம் என்று கொண்டாடுவதைப் போல, ஏற்றுக்கொள்வலாமே தவிர, மேற்கொண்டு நாட்களை ஒதுக்கி விடுமுறை தருகிற அளவிற்கு சட்டம் இடம் தரவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்,

பின்னலூர் கிராமம் வாலாஜா ஏரிப் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு,

*வினா எண் 1049—திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சிதம்பரம் வட்டம் பின்னலூர் கிராமத்தில் வாலாஜா ஏரி என்ற பெயரில் உள்ள நிலங்களைத் தாழ்த்தப்பட்ட மக்கள் பயிரிடுபவர்களுக்கு 5 மடங்கு தீர்வை போட்டு அவர்கள் மகசூலை அனுபவிக்க முடியாது செய்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், ஏன் பட்டா செய்யப்படவில்லை?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் தரத் தீர்வையாகவும், தண்டத் தீர்வையாகவும் 10 ரூபாய் தான் போடப்பட்டிருக்கிறது. ஏரியின் உள்புறம் இருக்கும் இடங்களைப் பட்டா போட்டுக் கொடுப்போமேயானால் அதனுடைய ஆயக்கட்டு பாதிக்கப்படும் என்று மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியும், மாவட்ட ஆட்சித் தலைவரும் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வதிலிருந்து உண்மையான தகவலை அவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று நினைக்கிறேன். காரணம் ஒரு ஏக்கருக்கு 10 ரூபாய் என்று சொல்லிய பிறகும் 50 ரூபாய் கட்டியதற்கான ரசீதும் இருக்கிறது என்பது உண்மை. அத்தோடு கூட, அதே தாலூகாவில் வளையமாதேவி, திருநாரையூர், வீராணநல்லூர் போன்ற இடங்களில் அதேபோன்று, ஏரியின் உள்ளே இருக்கும்

1981 மே 11]

பகுதிகளை அரசு பட்டா போட்டு கொடுத்திருக்கிறது என்பதும், இதே அதிகாரிகளே அவைகளுக்கு சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்பதையும் இந்த அரசு அறியுமா என்று தெரியவிரும்புகிறேன்,

மாண்புமிகு, திரு . எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தகவலின்படி, தண்டத் தீர்வையை 5, மடங்கு கொடுக்கவில்லை என்றுதான் எனக்கு எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, அந்த ஏரியைப் பொறுத்தவரையில், நீண்ட நாட்களாக அவர்கள் ஆக்கிரமித்து இருக்கிறார்கள் என்றும். ஆக்கிரமிப்பாளர்களுக்கு பட்டா கொடுப்பதிலே சில சங்கடங்கள் இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமானால் அந்த ஏரியினுடைய ஆயக்கட்டு 16,485 ஏக்கர். தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பெரிய ஏரிகளில் ஒன்று இந்த ஏரியும் ஆகும். அந்த ஏரியினுடைய பரப்பளவே 557 ஆகும். ஆனால் இப்படிப்பட்ட ஏரிக்கு தண்ணீர் கொண்டு வரப்படுகிறபோது சேத்தியாதோப்பு அணைக்கட்டு மூலமாகத்தான் தண்ணீர் கொண்டுவரப் படுகிறது,

ஆகவே, அதில் நாம் பட்டா போட்டுக் கொடுத்துவிட்டால், அதன் கீழ் இருக்கிற ஆயக்கட்டுகள் பாதிக்கப்படும் என்று வருவாய்த்துறை அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். யாரோ ஒரு சிலர் பணம் கட்டி இருக்கலாம். இன்னும் சொல்லவேண்டுமானால் இப்படிப்பட்ட மடங்குத் தீர்வை போடப்பெற்று கொஞ்சம் வசூல் செய்யப்பெற்றிருந்தாலும். இன்னும் 18 ஆயிரம் ரூபாய் இதுவரையில் வசூலே செய்யப் பெறவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9–10]

திரு. எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசுக்கு அந்த எண்ணம் இருந்தாலும், ஒருவருக்கு பட்டா கொடுக்க சிபார்சு செய்து வேறு ஒருவருக்குக் கொடுக்காமல் இருப்பது என்பது சரியா? தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்து முட்டாரம்பாக்கம் ஏரியில் ஒரு பகுதியில் சிலருக்கு மகசூல் செய்ய கொடுத்துவிட்டு இன்னொரு சமுதாய மக்களுக்குப் பயிரிட்டதை, மகசூலையே அழித்திருக்கும் நிலை இருக்கிறது. வாலாஜா ஏரியில் ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு அனுமதித்துவிட்டு ஒரு சிலர் பயிர் செய்திருப்பதை அழித்திருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே இதைப் பற்றி விசாரித்து எதிர்காலத்திலாவது நியாயம் வழங்க எல்லோருக்கும் பட்டா செய்து கொடுக்கும் முறையில் அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: எனக்குக் கிடைத்துள்ள தகவல்படி வாலாஜா ஏரி பற்றிய தகவல்மட்டும் இப்போது என்னிடமிருக்கிறது. வேறு தகவல்கள் இப்போது என்னிடம் இல்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்

போது இன்னார் இன்னார் வேளாண்மைப்படுத்திய நிலத்தை அழித்திருக்கிறார்கள், இன்னார் இன்னார் வேளாண்மைப் படுத்திய நிலத்தை அனுமதித்திருக்கிறார்கள் என்று தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு .எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்களுக்கு நன்றி, வாலாஜா ஏரியில் 'எ' பிரிவில் பயிரிட்டதை அவர்கள் அழித்து 'பி' பிரிவில் மகசூலை அறுக்கும்படி செய்தது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே வருங்காலத்தில் அதிகாரிகள் நியாய உணர்வோடு பயிர்களை அழிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அதேபோல் தண்ணீர் பிடிக்காத பகுதிகளை, நீர்ப்பிடிப்பு இல்லாத பகுதிகளை பட்டா செய்துகொடுக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நீதி தராசு முறைபில் வழங்கவேண்டும் என்றுதான் இந்த அரசு கருதுகிறது. எங்களுடைய பாரம்பரியம்—முதலில் தராசுதான் எங்கள் சின்னமாக இருந்தது என்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆகவே எங்கேயாவது அநியாயம் நடந்திருந்தால் அதைப் பற்றித் தெரிவித்தால் அதைக் கண்டிக்கவும் மீண்டும் அப்படிப்பட்ட காரியங்கள் நடக்காமலிருப்பதற்கும் இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளும்.

திருவில்லிபுத்தூர் தொகுதி திருவண்ணாமலை கிராமத்திலுள்ள புஞ்சை நிலத்தை 'நத்தமாக' மாற்றும் திட்டம்

*வினா எண் 1050 திரு இரா தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

திருவில்லிபுத்தூர் தொகுதி திருவண்ணாமலை கிராமப் பொதுமக்கள் குடியிருக்கும் ச. எண் 530/ஏ4 ஏ1சி புஞ்சை நிலத்தை நத்தமாக மாற்றும் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு. திரு. எஸ், டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறபடி சர்வே எண் 530 என்பதற்குப் பதிலாக 530—4(எ) 4 (1) என்று தான் அங்கிருக்கிறது. 42 பேர்கள் குடியிருக்கிறார்கள். அது புன்செய் நிலம்,

திரு. இரா. தாமரைக்கனி : திருவில்லிபுத்தூர் தொகுதி திருவண்ணாமலை கிராமத்தில் 530/ஏ4 குடியிருப்பில் இருப்பவர்கள் ஏழை எளிய மக்கள், பிற்பட்ட வகுப்பு மக்கள். அடித்தளத்திலிருக்கிற மக்கள். அவர்கள் வீடற்றவர்கள், ஆகவே ஏழை எளிய மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து கொடுப்பது போல் இது தனியார் நிலமாகயிருப்பதால் இந்த பிற்பட்ட மக்களுக்கும் அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து அந்த வீடு இல்லாத மக்களுக்குப் பட்டா கொடுக்க ஆவன செய்யப்படுமா?